V8T

விருதுநகர் மாவட்டம்
காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2023

-----

## வகுப்பு 8

காலம்: 2.30 மணி

தமிழ்

மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

அ) சரியான விடையைத் தேர்வு செய்க: **10×1=10**

1) பறவைகள் ................. பறந்து செல்கின்றன.
அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்
2) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் .................
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரம் ஈ) பாரதியார்
3) பள்ளிக்குச் சென்று கல்வி ................. சிறப்பு.
அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்
4) முறையான உடற்பயிற்சியும், சரிவிகித உணவும் .................யும் ஓட்டிவிடும்.
அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை
5) செவ்விந்தியர்கள் நிலத்தைத் ................. மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
6) பயனில்லாத களர்நிலத்துக்கு ஒப்பானவர் .................
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்
இ) ஒழுக்கமறறவர் ஈ) அன்பில்லாதவர்
7) உடல்நலம் என்பது ................. இல்லாமல் வாழ்தல் ஆகும்.
அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி
8) தமிழர் மருத்துவத்தில் மருந்துஎன்பது ................. நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
9) கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் எது?
அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த
10) எட்டாம் வேற்றுமை ................. வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.
அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** **5×1=5**

11) புறஉலக ஆராய்ச்சிக்கு ................. கொழுகொம்பு போன்றது.
12) கல்விக்குரிய பருவம் .................
13) கற்றவருக்கு அழகு தருவது .................
14) முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ................. எனப்படும்.
15) ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல் ................. எனப்படும்.

**இ) பொருத்துக:** **5×1=5**

16) மட்டு - அ) உலகம்
17) சுண்ட - ஆ) தடுமாற்றம்
18) வையம் - இ) வினையெச்சம்
19) திட்டுமுட்டு - ஈ) நன்கு
20) நடந்து - உ) அளவு

### பகுதி - II

குறுகிய விடையளி:

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

21) ஓவிய எழுத்து என்றால் என்ன?
22) மெய்யெழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
23) கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?
24) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
25) நோயின் மூன்று வகைகள் யாவை?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

26) நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
27) தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
28) ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
29) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
30) திரு.வி.க. குறிப்பிடும் சங்கப்புலவர்கள் பெயர் கூறு.

**இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** **2×2=4**

31) உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?
32) முற்றெச்சத்தை சான்றுடன் விளக்குக.
33) எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

## பகுதி - III

**அ) சிறுவினா:** **3×4=12**

34) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

**(அல்லது)**

கோணக் காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

35) நீர்நிலைகள் பற்றி சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

**(அல்லது)**

தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவமாற்றம் குறித்து எழுதுக.

36) தெரிநிலை வினையெச்சம் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

எழுவாய் வேற்றுமையை விளக்குக.

**ஆ) சிந்தனை வினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** **2×5=10**

37) நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?

38) கல்வியின் பயன்களை எழுதுக.

39) நிலவளம் காக்க நீங்கள் செய்ய வேண்டுவன யாவை?

## பகுதி - IV

**அடிபிறழாமல் எழுது:** **4+2=6**

40) கற்றோர்க்கு கல்வி - எனத் தொடங்கும் குமரகுருபரர் பாடல்.

41) தன்குற்றம் - எனத் தொடங்கும் திருக்குறள்.

## பகுதி - V

**மொழிப்பயிற்சி: (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** **4×2=8**

42) **அ) பொருள் கூறுக:**

1. வண்மொழி -
2. முகில் -

43) **ஆ) பிரித்து எழுதுக:**

1. என்றெல்லாம் -
2. நலமெல்லாம் -

44) **இ) சேர்த்து எழுதுக:**

1. ஓடை + ஆட -
2. நாம் + இனி -

45) **ஈ) கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ...............
2. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ...............

46) **உ) தொகைச் சொல்லை விரித்தெழுதுக:**

1. ஐம்பால்
2. இருதிணை

47) **ஊ) சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுத்து எழுது:**

1. கோழி .............. (கூவும் / கொக்கரிக்கும்)
2. சோறு ................ (தின் / உண்)

## பகுதி - VI

**விரிவான விடையளி:** **3×8=24**

48) திருக்குறள் கருத்தை பின்பற்றி நடந்த சகாதேவன் கதையை எழுதுக.

**(அல்லது)**

வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுது.

49) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்று குறித்து சியாட்டல் கூறுவன யாவை?

**(அல்லது)**

தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகள் தொகுக்க.

50) **கொடுக்கப்பட்ட குறிப்புகள் கொண்டு கட்டுரை வரைக:**

முன்னுரை - நோய்வரும் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சி - முடிவுரை.

**(அல்லது)**

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

---------